1982 மார்ச் 8]

3. கவன ஈர்ப்பு.

பக்தவத்சலம் தொழில்நுட்பப் பயிற்சிப்பள்ளி விடுதி மாணவர்கள் விஷ உணவு காரணமாகப் பாதிக்கப்பெற்றுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, "விஷ உணவு சாப்பிட்டதால் காஞ்சிபுரத்திலுள்ள பக்தவத்சலம் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி (பாலிடெக்னிக்) விடுதியைச் சார்ந்த 60 மாணவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பெற்றது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 17—2—1982 அன்று இரவு 7-45 மணி அளவில் காஞ்சிபுரம் பக்தவத்சலம் பாலிடெக்னிக் குடன் இணைந்த விடுதி உணவகத்தில் உணவருந்திய சில மாணவர்களுக்கு தலைசுற்றுதல், வாந்தியெடுத்தல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டதாகத் தெரிகிறது. உணவில் ஏதும் விஷம் கலந்திருக்குமோ என்ற சந்தேகத்தில், உணவருந்திய 59 மாணவர்கள் அனைவரும் முன்னெச்சரிக்கையாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் இரு மாணவர்கள் மட்டுமே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மாவட்ட சுகாதார அதிகாரி, நகர சுகாதார அதிகாரி மற்றும் திருப்புகுழி ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர் ஆகியோர் விடுதிக்குச் சென்று விசாரணை நடத்தி யுள்ளனர். மேலும் உணவு மாதிரியும் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப் பட்டுள்ளது. விசாரணையிலிருந்து, உணவில் விஷம் கலந்ததற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிய வந்துள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்கள் எல்லோரும் நல்ல நிலையில் உள்ளனர்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, உணவு மாணவர்களுக்கு அளிக்கப்படுவதற்கு முன்பாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படுமா? பல்லி, கரப்பான் பூச்சி போன்றவை உணவுப் பொருள்களில் விழுந்துவிடுவதால் இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே இவற்றை தடுப்பதற்கு தொல்லை தரும் பல்லி, கரப்பான் பூச்சி போன்றவைகளை ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உணவு தயாரிக்கப்படுகின்ற சமையல் அறைகள் சுத்தமாக இருக்கவேண்டும் என்றும் நல்லமுறையில் கண்காணித்து பராமரிக்கப்பட வேண்டுமென்றும் அதற்குப் பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.